## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!




## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!




# சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டத்தை நிறுத்தி வைத்தது ஏன்?

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!



சென்னை, ஜூன் 1-

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டத்தை நிறுத்தி வைத்தது ஏன் என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

முதல்வராக விஜய் பொறுப்பேற்றவுடன், பெண்கள் பாதுகாப்புக்காக சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

இந்த சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையில் இடம்பெறும் பெண் போலீஸ் மற்றும் பெண் சப் இன்ஸ்பெக்டர்களுக்கு சிறப்பு சீருடை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சிங்கப்பெண் அதிரடிப்படையின் தொடக்கவிழா முதலில் கடந்த 27ம் தேதி ராஜரத்தினம் விளை யாட்டு மைதானத்தில் நடக்க இருந்தது. முதல்வர் அன்று டெல்லி சென்றதால், சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் தொடக்க விழா தள்ளிவைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இத்திட்டத்தை முதல்வர் விஜய் தொடங்கி வைப்பதாக இருந்தது. இதற்கான ஏற்பாடுகள் எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்று வந்தது. கடைசி நேரத்தில் தொடக்க விழா திடீரென ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தனது எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:

கடலூரில் இளம்பெண் ஒருவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட செய்தி, தூத்துக்குடியில் நண்பர்களுடன் ஏற்பட்ட தகராறில் இளைஞர் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்ட செய்தி என தமிழ்நாட்டில் அடுத்தடுத்து வேதனை அளிக்கும் குற்றச்சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

அதிகரித்துவரும் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளின் தீவிரத்தை உணர்ந்து எப்போது செயல்படப் போகிறது, த.வெ.க. அரசு?. மகளிர் பாதுகாப்புக்காக தொடங்கப்படும் என்று அறிவித்திருந்த ‘சிறப்பு அதிரடிப்படை’ திட்டத்தை நிறுத்தி வைத்துள்ளது ஏன்?. தொடரும் இந்த குற்றச் சம்பவங்களை தடுக்க என்ன செய்யப்போகிறது, இந்த அரசு?

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில்

# ஜூன் 3 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் - நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ரகுபதி அறிக்கை!



புதுக்கோட்டை, ஜூன் 1 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.ரகுபதி தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

“உலகம் முழுவதிலும் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கும், மூத்த மொழியாம் தமிழ்மொழி செம்மொழி தகுதியைப் பெற்று இன்று பட்டொளி வீசி பறப்பதற்கும் காரணமாயிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை தலைமைக் கழகத்தின் வழிகாட்டுதல்களோடு ஜூன் 3ம் தேதி முதல் எழுச்சியோடு கொண்டாடப்படவிருக்கிறது

உலகத்தலைவர்களில் தாம் போட்டியிட்ட இடங்களிலெல்லாம் வெற்றி பெற்ற ஒரே தலைவராய், தமிழ்நாட்டை செதுக்கிய சிற்பியாய் திகழும், ஒப்பாரும் மிக்காரும் இல்லா தலைவராம் கலைஞர் அவர்கள், தமது 14ம் வயதில், திருவாரூரில் தொடங்கிய பொதுவாழ்வு பயணத்தில், எத்தனையோ சாதனைகளை படைத்து உயர்ந்து இருந்திருக்கிறார்.

அப்படிப்பட்ட அந்த மகத்தான தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கழகத்தலைவர் தளபதி, கழக இளைஞரணி செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது வழிகாட்டுதல்களோடு புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் ஜூன் 3 ந் தேதி பிறந்த குழந்தைகளுக்கு புதுக்கோட்டை தெற்கு மாபட்ட தி.மு.க. மற்றும் தெற்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் ஜூன் 3ந் தேதி காலை 10 மணிக்கு தங்க மோதிரம் வழங்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து பொன்னமராவதி அரசு மருத்துவமனையில் ஜூன் 3ந் தேதி பிறந்த குழந்தைகளுக்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் பொன்னமராவதி நகர திமுக சார்பில் தங்க மோதிரம் வழங்கப்படுகிறது.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் முழுவதிலும் மாவட்ட, ஒன்றிய ,நகர, பேரூர், கிளை மற்றும் வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றியும் , பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் சிறப்போடு கொண்டாடப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து ஜூன் 4ந்தேதி மதியம் 3 மணிக்கு மேல் திருமயம், பொன்னமராவதி, அரிமளம் ஆகிய ஒன்றியங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய ,நகர, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

### நெல்லை மேற்கு மாநகர் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் 103ஆவது பிறந்தநாள் விழா!

## மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் வேண்டுகோள்!

நெல்லை, ஜூன் 1 -

நம் உயிர் நிகர் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவாக வெகு சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும்.என நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது-

நம் கழகத்தலைவர் அன்புத் தளபதியார் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103ஆவது பிறந்த நாளை கழக உடன்பிறப்புகளுக்கான புத்தெழுச்சி நாளாக கொண்டாட அறிவுறுத்தியுள்ளார்.

“நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்களின் 103 ஆவது பிறந்தநாளான வரும் ஜூன் 3ஆம் நாள், நமக்கான புத்தெழுச்சி நாளாக அமையட்டும். தமிழ்நாடு முழுவதும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்.

கழகக் கிளைகள் எங்கும் கருப்பு சிவப்பு இரு வண்ணக் கொடி உயர்ந்து பறக்கட்டும், நலிந்தோருக்கும், ஏழைகளுக்கும் உதவி நிகழ்வுகள் நடக்கட்டும். 75 ஆண்டுகளைக் கடந்த இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட மூத்த முன்னோடிகளுக்கு உதவிடும் வகையில் தலைவர் கலைஞரின் அவர்களின் பிறந்தநாளைக் கழக நிர்வாகிகள் கொண்டாட வேண்டும்!” எனக் வலியுறுத்தியுள்ளார்.

இதனடிப்படையில், நம் உயிர்நிகர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு,கழகத் தலைவர் தளபதியார் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞரணி செயலாளர், தி.மு.க.சட்ட மன்றக் குழுத் தலைவர், உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்களின் வழிகாட்டுதலின்படி, நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.ஆலோசனையின்படி, நெல்லை பேட்டை கிழக்கு பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் கோபி தலைமையில்,நெல்லை மேற்கு மாநகர தி.மு.க.சார்பில், நெல்லை டவுணில் உள்ள மாநகர கழக அலுவலகத்தில், வரும் ஜூன் 3ம் தேதி காலை 9 மணியளவில், முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கப்படும்.தொடர்ந்து அன்று காலை 10:30 மணியளவில் காந்திமதி அம்பாள் நெல்லையப்பர் கோவிலில் பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் அன்னதானம் வழங்கும் நிகழ்வும் நடைபெற உள்ளது.

ஆகவே மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள்,பி.எல்.ஏ2,பி.எல்.சி,பி.டி. ஏ.மற்றும் கழக சொந்தங்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா

# கேரள மாநிலம் முழுவதும் நலத் திட்டங்கள் வழங்கல்!

## மாநில தி.மு.க. அமைப்பாளர் புதுக்கோட்டை கே.ஆர்.முருகேசன் அறிக்கை!



திருவனந்தபுரம், ஜூன் 1 -

கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் புதுக்கோட்டை கே.ஆர். முருகேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் விழா வரும் ஜுன் மாதம் மூன்றாம் தேதி திருவனந்தபுரம் முதல் காசர்கோடு வரை உள்ள 14 மாவட்டங்களிலும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது இதன் ஒரு பகுதியாக கொல்லம் மாவட்டம் புனலூரில் உள்ள ஆஷா பவன் ஆதரவற்றோர் இல்லத்தில் கேரள மாநில திமுக அமைப்பாளர் புதுக்கோட்டை கே.ஆர்.முருகேசன் (நான்) ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் முதியோர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் அறுசுவை உணவு வழங்குகிறேன். இந்த நிகழ்ச்சிக்கு கொல்லம் மாவட்டக் கழகச் செயலாளர் ரெஜிராஜ் தலைமை வகிக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் கேரள மாநில திமுக இளைஞரணி துணை அமைப்பாளர்கள் விபின் முருகேசன், ஹரி குமார், துரை பேச்சிமுத்து கொல்லம் மாவட்டக் கழக நிர்வாகிகள் அச்சு பிலால், ஹரி புனலூர், சதாசிவம் ஆசாரி, சுரேஷ் குன்னிக் கோடு, ரினுராஜன், புவனேஷ், அஜ்மல் பின் ஜமால், ஷாஜி சுலைமான், கீதா கிருஷ்ணன், ராணி ஆதித்யா, லால்ஜி மோகன், கிரிஜா, சரோஜம், ஷகினா தென்மலை, அஜிதா நபீக், அஜித் செம்மனாடு, ஷாம் லால், ஏ.கே.நவாஸ், ராமர் சீனிவாசன் புனலூர், அஜய் குமார், பி.கே.பாபு, ஜான்சன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். திருவனந்தபுரம் மாவட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் அனிஷ், அருள் ஜோதி, ஷாஜி, அருண் ஆகியோர் தலைமையிலும் இடுக்கி மாவட்டத்தில் மாநில பொறுப்புக் குழு உறுப்பினர் மோகன் தாஸ், மாவட்ட கழக செயலாளர் முகமது ரபீக், மன்னன், மாத்யூ ஜான், உப்புத்தரை ராஜேஷ், சஜீவ், சைனபா, ஆஷா, ஜெபக்கனி, நல்லழகு, சீனிவாசன், காமராஜ், குருசாமி ஆகியோர் தலைமையிலும் எர்ணாகுளம் மாவட்டத்தில் கே.என்.பிரதீப் தலைமையிலும் பாலக்காடு மாவட்டத்தில் ரஞ்சித் ,மஜீத், ஜாபர், அபுபக்கர், செரீப், மொய்த்து, மாணிக்கன், பாலன், பவதாஸ் ஆகியோர் தலைமையிலும் மலப்புறம் மாவட்டத்தில் சாஜிதா, பிரமீளா, நியாஸ், பசில் ஆகியோர் தலைமையிலும் திருச்சூர் மாவட்டத்தில் சனூப், அஜ்மல் பாபு, அன்வர் அப்துல்லா ஆகியோர் தலைமையிலும் கோட்டயம் மாவட்டத்தில் மாத்யூ ஜான், இலியாஸ் ஆகியோர் தலைமையிலும் கோழிக்கோடு மாவட்டத்தில் நவ்சாத் தலைமையில் நடைபெறுகிறது. அது போல பிற மாவட்ட கழகங்களில் அந்தந்த மாவட்டக் கழக செயலாளர்கள மற்றும் நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். இந்த நிலையில் அனைத்து மாவட்ட கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் விழா கேரள மாநிலம் முழுவதும் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்து நலத் திட்டங்களை வழங்கி சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திருப்பூர் மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு ஆலோசனைக் கூட்டம்!

திருப்பூர், ஜூன் 1 -

பல்லடத்தில் ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டம் மாவட்ட துணை செயலாளரும், முன்னாள் ஒன்றிய பெருந் தலைவருமான வழக்கறிஞர் குமார் தலைமையில்,

பல்லடம் மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரையில்,

திருப்பூர் வடக்கு மாவட்ட அமைப்பாளர் பழனிச்சாமி, திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் மா. கன்னிமுத்து, திருப்பூர் மத்திய மாவட்ட அமைப்பாளர் சுப்பிரமணியம், திருப்பூர் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் சக்திவேல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றெது.

இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கழக மாநில ஆதி திராவிடர் நலக்குழு இணை செயலாளர் டாக்டர். திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி கலந்து கொண்டு ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகளிடம் கலந்து உரையாடி, வருகின்ற ஜூன் 3ம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா ஆதி திராவிடர் நலக்குழு சார்பில் கொண்டாடுவது குறித்தும் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு மாவட்ட தலைவர்கள், மாவட்ட துணை தலைவர்கள் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர் என பலர் கலந்து கொண்டனர்.




திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகமான ”கலைஞர் அறிவாலயம், ”தளபதி அரங்கில் மாவட்ட கழகச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுசெயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு கருத்துரையாற்றினார். இதில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே பி.அழகாபுரியில் பட்டாசு தயாரிப்பு கிடங்கில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்து நடந்த இடத்தை புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டார். நிகழ்வில் திருமயம் தெற்கு ஒன்றியச் செயலாளர் அழகு சிதம்பரம், கே.ஆர் ராமசாமி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.